இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-09-2023

# அணைகளின் நாயகன் கலைஞர்

* உப்பாறு - ஆழியாறு அணை
* உப்பாறு - சோலையாறு அணை
* சோலையாறு அணை
* ராமநதி அணை
* பொன்னியாறு அணை
* பில்லூர் அணை
* பரப்பனாறு அணை
* மஞ்சளாறு அணை
* மணிமுடிதாங்கி அணை
* கீழ் கொடையாறு அணை
* பிளவுக்கல் - பெரியாறு நீர்த்தேக்கம்
* பிளவுக்கல் - கோவிலாறு நீர்த்தேக்கம்
* கடானா நீர்த்தேக்கம்
* இராமநதி நீர்த்தேக்கம்
* கருப்பாநதி நீர்த்தேக்கம்
* சித்தாறு நீர்த்தேக்கம்
* மேல் நீராறு நீர்த்தேக்கம்
* கீழ் நீராறு நீர்த்தேக்கம்
* பெருவாரி பள்ளம் நீர்த்தேக்கம்
* சின்னாறு
* மருதாநதி நீர்த்தேக்கம்
* சின்னாறு நீர்த்தேக்கம்
* குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கம்
* வறட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம்
* பாலாறு பொரந்தலாறு நீர்த்தேக்கம்
* வரதமாநதி நீர்த்தேக்கம்
* பரப்பலாறு நீர்த்தேக்கம்
* மோர்தானா நீர்த்தேக்கம்
* ராஜாதோப்பு நீர்த்தேக்கம்
* பொய்கையாறு நீர்த்தேக்கம்
* இருக்கன்குடி அணை
* மாம்பகத்துடையாறு அணை
* நல்லதங்காள் அணை
* நாங்கியாறு அணை
* செண்பகத்தோப்பு அணை
* சோத்துப்பாறை அணை

– இப்படி ஏராளமான அணைகளை, நீர்த்தேக்கங்களை உருவாக்கிய அரசுதான் தி.மு.கழக அரசு.

இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய மாபெரும் சாதனைகளை நிகழ்த்திய நவீன கரிகால் சோழன்தான் நம்முடைய கலைஞர் அவர்கள். இவை அனைத்தும் கழக அரசின் கம்பீரத்துக்கான சாட்சியங்களாக இன்று வரை இருக்கின்றன.

1967 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை அமைச்சராக தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். 1969 முதல் 1976 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார்கள். இந்தக் காலக்கட்டத்தில் மொத்தம் 20க்கும் மேற்பட்ட அணைகள் தமிழ்நாட்டில் கட்டப்பட்டன. இக்காலக்கட்டத்தில் தலைவர் கலைஞர், சாதிக் பாட்சா, ப.உ.சண்முகம், செ.மாதவன் ஆகியோர் பொதுப் பணித் துறை அமைச்சர்களாக இருந்தார்கள்.

1989-91, 1996-2001, 2006-2011 ஆகிய காலக் கட்டங்களில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது 22 அணைகள் கட்டப்பட்டன. அப்போது மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார்கள்.

**1967 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் தமிழ்நாட்டில் இருந்தவை 15 அணைகள். கழக ஆட்சியில் கட்டப்பட்டவை 42 அணைகள்.**

‘தினமலர்’ பத்திரிக்கையே-’**தமிழக அணைகளின் நாயகன் கருணாநிதி**’ என்று 9.8.2018 அன்று தனது இணைய தளத்தில் எழுதி இருக்கிறது. இதை யாவது அந்த அரைகுறை மனிதன் படித்திருக்க வேண்டும்.

இதை எல்லாம் தெரிந்து கொள்ள முயற்சிக்காத தற்குறிகள் சில, திடீரென, ‘தி.மு.க. காலத்தில் அணைகளே கட்டப்படவில்லை’ என்று உளற ஆரம்பித்துள்ளன. இதற்கு நீர் வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் முழுமையான அறிக்கையை அளித்துள்ளார்கள். ‘**எதையும் தெளிவாக தெரிந்து கொண்டு பேச வேண்டும்**’ என்று சொல்லி இருக்கிறார்கள். பா.ஜ.க. அரைகுறைகள், தெரிந்தே தான் இதுபோல பொய்களைப் பரப்புகிறார்கள்.

**பா.ஜ.க.வின் சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேட்பதற்கு எதுவும் இல்லை. அதனால்தான் அடுத்தவர்களைக் குறை சொல்லி காலத்தைப் போக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.**

பிரதமராக மோடி பொறுப்பேற்றதும் என்ன சொன்னார்? “5.5 லட்சம் கோடி செலவில் 60 நதிகளை இணைக்கப் போகிறேன். எனது வாழ்நாள் லட்சியம் இதுதான்” என்று சொன்னார் மோடி. செய்துவிட்டாரா? அதனை இந்த தற்குறிகள் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும். 2017 ஆம் ஆண்டு தொடங்கப் போவதாக ஒரு முறை அறிவித்தார்கள். 2019 ஆம் ஆண்டு தொடங்கப் போவதாக ஒருமுறை அறிவித்தார்கள். இப்போது 5.5 லட்சம் கோடி திட்டத்தின் நிலைமை என்ன?

**அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டதையும் தி.மு.க. ஆட்சி தனதாகச் சொல்லிக் கொள்கிறது என்கிறது அந்த தற்குறி. தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சி முடித்து வைத்திருக்கும். அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டத்தை, தி.மு.க. ஆட்சி திறந்து வைத்திருக்கும். அணைகளை, டீ கடை போல ஒரு நாள் ராத்திரியில் உருவாக்கி விட முடியாது.**

சர்தார் சரோவர் அணையை 2017 ஆம் ஆண்டு பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த திட்டத்துக்கான அடிக்கல் 1961 ஆம் ஆண்டு பிரதமர் நேரு அவர்கள் இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கினார். 1979 ஆம் ஆண்டு ஜனதா ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது. 1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது கட்டுமானப் பணிகள் தொடங்கியது. 2006 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பெரும்பாலான பணிகள் முடிந்தன. அணையின் உயரத்தை அதிகப்படுத்து வதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. இந்தப் பணிகள் 2017 இல் முடிந்தது. மோடி வருகை தந்து திறந்து வைத்தார். இதுதான் சர்தார் சரோவர் அணையின் வரலாறு. திறந்து வைத்த சாதனை அவருக்கு போய்விட்டது.

**மேலும், ஹோட்டல் போல கண்ட இடத்தில் எல்லாம் அணை கட்டி விட முடியாது. எங்கு அவசியத் தேவையோ அங்குதான் கட்ட முடியும்? அது தெரியாமல், ‘அணைகள் ஏன் கட்டவில்லை?’ என்று தற்குறித்தனமாகக் கேட்கக் கூடாது. தற்குறிகள் வாயைத் திறக்க வேண்டாம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராம ஊராட்சிக்கு பொதுமக்கள் வரி / கட்டணங்கள் செலுத்துவதற்கான இணையதளம் மற்றும் தமிழ்நாடு எளிமைப்படுத்தபட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்திற்கான இணையதளம் ஆகியவற்றை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் எம்.கே.பஜாஜ், மாநில தகவலியல் அலுவலர் (State Informatics Officer) சி.ஜே.அந்தோணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.28-

**தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சி பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணைய தளத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளத்தினையும் தொடங்கி வைத்தார்.

**தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு தொடங்கி வைத்தல்**

அயலக மாணவர்களின் தமிழ்க் கற்றல் கற்பித்தலுக்காக தமிழ்ப் பரப்புரைக் கழகத்தை செப்டம்பர் 2022இல் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் பணிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது. இதில் திறன்கள் அடிப்படையிலான பாடப்புத்தகங்கள், கற்றல் துணைக்கருவிகள், கட்டணமில்லா இணையவழி வகுப்புகள் முதலான பல வசதிகள் 34 நாடுகளிலும் 16 இந்திய மாநிலங்களிலும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் 160 தொடர்பு மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொடர்பு மையங்களில், மாணவர்களுக்குத் தன்னார்வலர்கள் தமிழ் பயிற்றுவித்து வருகின்றனர். தமிழ் மொழியின் அடிப்படைகளையும் முறையான கற்பித்தல் பயிற்சியையும் இவர்களுக்கு வழங்கினால் தமிழ் மொழிக் கற்பித்தலை இன்னும் மேம்படுத்த முடியும் எனப் பல அயலகத் தமிழ்ச்சங்கங்களும் பள்ளிகளும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், தமிழ் பரப்புரைக் கழகத்தின் மற்றொரு முக்கியமான முன்னெடுப்பாகத் தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான இணையவழி ஓராண்டு ஆசிரியர் பட்டயப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டது.

இந்தப் பட்டயப்பயிற்சியைத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி யியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க 12.1.2023 அன்று நடைபெற்ற அயலகத் தமிழர் தினவிழாவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இந்தப் பட்டயப்பயிற்சியைத் தொடங்குவதற்கான பணிகள் முடிவடைந்து, இந்தக் கல்வித் திட்டத்தில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பை (http: //tva.reg.payil.app/) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். மேலும், இப்பட்டயப் பயிற்சி குறித்த குறிப்பேட்டினை (Brochure) முதலமைச்சர் அவர்கள் வெளியிட, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் பெற்றுக்கொண்டார்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணைய தளத்தினை தொடங்கி வைத்தல்**

எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப வன்பொருள் கொள்முதல், தகவல் தொழில் நுட்ப பூங்கா மேலாண்மை, தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு சேவைகள், ஆதார் பதிவு சேவைகள், மாநில தரவு மையத்தில் மென்பொருள் பதிவேற்றம் மற்றும் தரவு பதிவேற்றம் சேவைகளுக்கான முகமை ஆகும். எல்காட் நிறுவனம் மின்னாளுகை சேவைகளின் முதுகெலும்பாக இருக்கும் மாநில தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு சேவை களையும் வழங்கி வருகிறது. தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு வழித்தட அனுமதி வழங்குவதற்கான ஒரு இணையதளத்தை எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

எல்காட் நிறுவனத்திற்கும், அரசுத் துறைகளுக்கும், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பிற பங்குதாரர்களுக்கும் இடையே வெளிப்படையான, விரைவான மற்றும் திறமையான முறையில் சேவைகளை வழங்குவதற்கு தானியங்கு நெறிப்படுத்தப்பட்ட தொடர்புகளை *(Automated streamlined interactions)* வழங்கும் ஒருங்கிணைந்த இணைய தளத்தை *(https://erp.elcot.in/)* முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த இணைய தளத்தின் வாயிலாக, IT/ITes நிறுவனங்கள் நிலம் மற்றும் இட ஒதுக்கீடு, FSI மற்றும் அடமானக் கடனைப் பெற NOC வழங்குதல் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கவும், அரசுத் துறைகள் தகவல் தொழில்நுட்ப வன்பொருள் தயாரிப்புகளை விலை ஒப்பந்தம் மற்றும் குறிப்பிட்ட கொள்முதல் அடிப்படையில் வாங்கிடவும், தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்கள் புதிய ஒப்புதல்கள் மற்றும் ஏற்கனவே உள்ள தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்கவும், நிரந்தரப் பதிவு மையங்கள் மூலம் குடிமக்கள் ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் சேவைகளைப் பெறவும், அரசு துறைகள் தங்கள் தரவு பதிவேற்ற தேவைகளுக்கு விண்ணப்பிக்கவும் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எல்காட் ஒருங்கிணைந்த இணையதளம் கணினிகள், மடிக்கணினிகள், (லேப்டாப்கள்), கையடக்கக் கணினிகள் (டேப்லெட்டுகள்) மற்றும் திறன்பேசிகள் (ஸ்மார்ட் போன்கள்) போன்ற அனைத்து சாதனங்களுடனும் இணக்கமானது.

தகவல் தொழில்நுட்ப பூங்கா மேலாண்மை, வன்பொருள் கொள்முதல், தரவு பதிவேற்ற தேவைகள், வழித்தட அனுமதி வழங்குதல், தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை முறைப்படுத்துதல், ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் சேவைகள் ஆகியவற்றுக்கான தகவல் பலகைகள் மூலம் இந்த இணையதளம் உடனடி மற்றும் பயனுள்ள சேவை வழங்கலை உறுதிப்படுத்தும்.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைச் செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், தமிழ்நாடு மின்னணு நிறுவன செயல் இயக்குநர் எஸ்.அருண் ராஜ், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பி.சி. நாகசுப்பிரமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

